புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# குற்றப்பரம்பரை நாவல் மாந்தர்களின் இனவரைவியல்

*சி. பகவதி ராஜகுமாரி*
*முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 21212014022011, ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி,தமிழாய்வு மையம், தூத்துக்குடி - 628002. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அங்கீகாரம் பெற்றது, அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி, -12, தமிழ்நாடு, இந்தியா.*

*முனைவர். மு. புஷ்பகவல்லி*
*நெறியாளர் & உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழாய்வுமையம், ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி - 628002, தமிழ்நாடு, இந்தியா*

*ஆய்வுச்சுருக்கம்:-*

*இனவரைவியல் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை தேர்வு செய்யப்பட்டதே குற்றப்பரம்பரை நாவல் முழுக்க இனவரைவியல் சித்தரிப்புகளை உள்ளடக்கிய படைப்புகளாக எழுத்தாளர் வேலராமமூர்த்தி படைத்ததை ஆய்வுலகிற்கு அறிமுகம் செய்யும் நோக்கில் எழுதப்பட்டதாகும். இக்கட்டுரையில் குற்றப்பரம்பரையில் மறவர் குல இனக்குழுவின் வாழ்வியல், குடும்பம், உற்பத்தி சடங்கு என அனைத்து கோணங்களிலும் செய்திகளை இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகின்றது.*

*மேலும், இனவரைவியல் என்றாலே வெறும் படைப்புகள் மட்டுமே வைத்து இனம் காணுவது தவறு. நேரில் சென்று புள்ளி விவரம் சேகரித்த செய்திகளே இனவரைவியலில் உண்மையுள்ளதாக இருக்கும் என்று இனவரைவியலும் தமிழ் நாவலும் நூலில் ஆ.சிவசுப்ரமணியன் கூறியுள்ளார். ஆனால், வேலாவின் அனைத்து படைப்புகளும் இவரின் தொப்புள் கொடி உறவுகளின் நிகழ்வுகளென ஆசிரியரின் ஒப்புதலுக்கு இணங்க இக்கட்டுரையில் உள்ள செய்திகள் உண்மையென உற்றறியப்படுகின்றன.*

*முன்னுரை:*

*தமிழ் இலக்கியத் துறையில் மானிடவியலும் இனவரைவியலும் புதிய கருத்தாக்கங்களாக வளர்ச்சி பெற்று வருகின்றன. மானிடவியல் என்பது மனித இனம் பற்றிய அறிவியல் என்று கல்வி புலத்தில் அழைக்கப்பட்டு வருகின்றது. இலக்கியங்களின் நிலைபேற்றிற்குக் காரணமான இத்துறைகளை ஆய்வாளர்கள் பல்வேறு ஆய்வுக்கு உட்பட்டு வருகின்றனர். மனிதனின் தோற்றம், சமூகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், சடங்கு முறைகள் போன்றவற்றை அறிவதற்கு இலக்கியங்கள் உறுதுணை புரிகின்றன. புதினங்களிலும் இம்முறையியல் காணப்படுகிறது. இதனடிப்படையில் வேலராமமூர்த்தி அவர்கள் எழுதிய குற்றப்பரம்பரை என்ற நாவலில் குறிப்பிட்ட இனமக்களின் வாழ்வியலை, இனவரைவியல் அணுகுமுறையில் நோக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.*

*இனக்குழுவின் தோற்றம் :*

*வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களின் சமூகத்தை வேட்டைச் சமூகம் என்று அழைக்கிறோம். மலையும் மலை சார்ந்த பகுதியில் குழுக்களாக வாழ்ந்த மக்களிடத்தில் தோன்றியமுறை இனக் குழுக்கள் என்பதாகும். இக்குழுக்கள் தோன்றுமிடத்தில்*

*தலைவன் தோன்றி விடுகிறான். வேட்டையில் கிடைத்தப் பொருட்களை தன்னைச் சார்ந்த, தன்னோடு இருக்கின்ற கூட்டங்களுக்கு பகிர்த்து கொடுத்தல் என்ற பழக்கம் உருவாகிறது.*

*வரலாற்று காலத்திற்கு முன்பிருந்த காலத்தில் இனக்குழுச் சமூகத்தினரை மலைகளில் வாழ்ந்த இனக்குழு மக்கள் என்றும், சமவெளிப்பகுதிகளில் வாழ்ந்த இனக்குழுவினர்கள் என்றும், பழங்கால இனக்குழு மரபுகள் என்றும் கூறப்படுகின்றது. ஏனெனில் , இனக்குழுவினர் பொதுவாக பாதீடு முறைப்படி சமூகமாக பிரிகின்றனர். இதை தொல்காப்பியம் பாதீடு என்ற சொல்லில் சுட்டுகின்றது. வேற்று நாட்டில் இருந்து கவர்ந்துவரப்பட்ட பசுக்களைப் பகிர்ந்து கொடுத்தல், வேட்டையாடுதல் என்ற நிலையில் இருந்து வளர்ந்து கன்னமிடும் நிலைக்கு சென்று பங்கிட்டுக் கொடுத்தல் என்ற கவர்தல் மரபுகள் தொடர்வதை,*

*“தந்து நிறை பாதீடு, உண்டாட்டு கொடை என”* [1]

*என்று தொல்காப்பியம் களவுத் தொழில் புரியும் மரபினரை அடையாளம் காட்டுகின்றது.*

*மேலும் இனக்குழுவினர் இரத்த உறவுகள் உடையர்களாகவும், இரத்த உறவுகள் இல்லா மரபினர்களாகவும் இருக்கின்றனர் இவர்களிடையே பெண்ணைக் கவர்தல் மற்றும் பொருட்களைக் கவர்தல் போன்ற நிகழ்வுகளினால் இக்குழுக்களில் முரண்கள் ஏற்படுகின்றன மேலும் இக்குழுவின் எச்சமாக வெட்சி, கரந்தை மாந்தர்கள் பற்றி தொல்காப்பியம் உரைக்கின்றன.*

*இவ்வாறாக கன்னமிடும் மனிதர்களும் அம்மரபுகளை மாண்புகளாக கொண்டொழுகும் இனக்குழுவினரும். வாழ்வாதாரமே இல்லா இவர்களின் வாழ்வை ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் முடிவுகளே கருதுகோளாகத் திகழ்கின்றது.*

*வர்க்க முரண்பாடுவாழ்வியல்:*

*வர்க்கபேதம் என்பது இச்சமூகத்தால் இன்றுவரை தொடர்ந்து வரும் மிகப்பெரிய பாகுபாடாகத் திகழ்கின்றது. இதில் வர்க்க பாகுபாட்டை தொடர்ந்து அளிக்கும் கரிசல் வட்டார நாவல்களில் வேலராமமூர்த்தியின் நாவல்கள் சேதுச்சீமையின் மனிதர்களை மட்டுமே மையமிட்டு வலம் வரும் கதைக்களங்களாக அமைந்துள்ளன மேலும் இவரின் படைப்புகள் யாவும் குறிப்பிட ஒரு குழுவினரான மறவர் இனக்குழுக்களுடன் தொடர்பு கொண்ட மற்றும் முரண் கொண்ட மனிதர்களைப் பற்றியும், வாழ்வியலையும் சித்தரிக்கின்றன. இவ்வாய்வுக் கட்டூரையின் எல்லைகளாக இவ்வாய்வுக்கட்டூரையில் குற்றப்பரம்பரை நாவலில் மறவர் இனக்குழுக்களின் இனவரைவியலைத் தருவதாக நாவல் விளங்குகின்றது.*

*சமூகப்பெயர்வு:*

*சமூகம் என்ற சொல்லிற்கு அனைத்து மனிதர்களையும் ஒன்றிணைக்கும் குழுவாகவே எடுத்துக் கொள்ளப்படுகின்றது. சமூகம் என்ற சொல்லும், ‘சமுதாயம், என்றே பொருள் தருகிறது’.*

*“ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே சமூகம்”*[2]

*என்ற பொன்மணி வைரமுத்து நூலில் கருத்துக்கள் நிலவுகின்றது இதுபோன்ற இனக்குழுவினரின் பழமையான சமூகத்தையும் மறவர் இனக்குழு இம்மனிதனின் வரையறைகளையும் விளக்கமாகவும், வரலாற்றுரீதியிலும் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் அணுகுமுறைகளாக விளங்குகின்றன.*

*குற்றப்பரம்பரை மனிதர்கள் தங்கள் குடியிருப்புகளை முதலில் காட்டுப்பகுதிகளில் வனவாசிகளாக கழித்தனர். பின்பு ஆங்கிலேய காலனியர்களின் சேனைகளுக்கு அஞ்சி ஓடி ஒளிந்து தங்களின் குடியிருப்பை புலம்பெயர்தல் என்ற விலக்கில் இருந்து இடம்பெயர்ந்து*

*கொம்பூதியில் குடிகளை அமர்த்தியதாக நாவல் குறிப்படுகின்றது இதனை,*

"எல்லோரும் கிளம்பி, தெற்கே பார்த்து ஓடணும் கூட்டத்தை விட்டு யாரும் பிரிய கூடாது. தெற்கே வெகு தூரத்திலே சம்பங்கி ஆற்றுக்குக் குறுக்கே போய் கரை ஏறுங்க ........... எல்லாம் குல சாமி இருளப்பன் விட்ட வழி"[3]

என்ற நாவலின் வரிகள் கொம்பூதி என்ற ஓர் இனக்குழு உருவான முறையை எடுத்துரைக்கின்றது. இம்மக்கள் கிடைப்பதை உண்டு உலாவும் பழம்பண்புடையவர்களாகத் திகழ்கின்றனர். பசிக்கு பன்றிக்கறியும், பசியாற்றும் பாட்டாளிகளாக பொருளாதாரமின்றி வாழ்ந்ததாக நாவல் மூலம் விளக்கப்படுகின்றது.

பொருளாதார நிலை:

பழங்கால சமூகத்தை பின்பற்றிய கொம்பூதி மனிதர்கள் சங்ககால கன்னமிடும் தொழிலை புரியும் மாந்தர்களில் இருந்து சற்றும் மாற விரும்பாதவர்களாகத் திகழ்ந்தனர். களவையே கண்கண்ட தெய்வமாக தொழுதனர். இதற்கு சாட்சியாக கொம்பூதியில் குலசாமி இருளப்பனை குலக்குறியாக கோவிலில் அமர்த்தினர். கன்னமிடும் தொழிலுக்கு உத்தரவு கொடுக்கும் விதமாக,

"பட்சி வலமிருந்து இடம் அடித்துப் போனது. டைங்ங... டைங் டைங்ங்' கிழவி
இருளப்பசாமியின் திருமண் எடுத்து வேயன்னாவின் நெற்றி நிறையப் பூசி விட்டாள்.
குலசாமி... ஒரு குறையும் வைக் காது போயிட்டு வாங்க"[4]

என்ற வரிகள் கொம்பூதி மக்களின் தொழில் முறையும், வாழ்வியல் சடங்குகளும் புலப்படுகின்றன.

கவர்தலும் பங்கீடுகளும்:-

கன்னமிடும் தொழில்களுக்கு முன்னோடி மாந்தர்களாக சங்க இலக்கிய காலத்தில் ஆறலைக் கள்வர்கள் ஆநிரையை கவர்ந்தும், அதனை பாதீடு செய்தும் வாழ்ந்துள்ளதாக இலக்கியங்கள் இயம்புகின்றது. இதன்வழி மாந்தர்களான குற்றப்பரம்பரை மக்கள் கொம்பூதியில் இருந்து பிற பகுதிகளில் கன்னமிட்டு களவுத்தொழில் புரிகின்றனர். 'கன்னமிடுதல்' என்பது செல்வச் செழிப்பு மிக்க வீட்டினை அயலார் வேடமிட்டு 'நோட்டமிடுதல்' என்று நாவலில் பொருள் கொள்ளப்படுகின்றது. இதனை விளக்கும் நோக்கினில்,

"உச்சி நத்தம் பூமிநாதஞ் செட்டி ஒரு ரொம்ப நாளாகக் குறி வைத்த இடம், கழுவன்
கன்னக்கோலால் சுவரை உடைத்தான் சின்ன இடைவெளி கிடைத்தது"[5]

என்ற வரிகள் கன்னக்கோல் என்ற ஆயுதத்தின் பாங்கையும், களவுத்தொழிலின் தீரத்தையும் விளக்குகின்றது மேலும் இம்மனிதர்களுக்கு ஆடை, அணி போன்ற ஆசையில்லா ஆணவமற்றவர்ளாக இருக்கின்றனர். மூன்று வேளை வயிற்றுப்பாட்டிற்காக களவினை கற்று ஒழுகுகின்றனர்.

"பசி என்பது ஓர் உயிரியல் நிகழ்வு இது ஓரணுஉயிரியான அமீபா முதல்
படிமலர்ச்சியின் உச்சநிலையில் இருக்கும் மனிதன் வரை அனைத்து உயிரிகளிலும்
நிகழ்கிறது. மர்டாக்கின் இனக்குழுவியல் தரவுகளின் படி உலகில்15 விழுக்காடு வேட்டையாடி உணவு சேமித்து மக்கள் வசம் உள்ளது."[6]

என்று பசியின் முக்கியத்துவத்தை உயிரியல் தன்மையுடன் பக்தவச்சலபாரதி எடுத்துரைப்பதுடன் வேட்டையாடும் மாந்தர்களினது இனவரைவியலைக் கூறியுள்ளார். இம்மாதிரியாக வேட்டையாடும் தொழிலை புரியும் தீரன்களாகவே கொம்பூதி மனிதர்கள் வலம் வருகின்றதாக நாவலில் எடுத்துரைக்கப்படுகின்றது.

மேலும் இம்மனிதர்கள் களவு கொண்ட பொருட்களை பாதீடு செய்யும் முறையை இன்றுவரை கடைபிடித்து வாழ்வதில் இருந்து இம்மக்கள் இலக்கிய கால களவுமுறையும் புவிச்சூழலியல் அமைப்பையும், கொண்டு வாழ்வதாக எடுத்தாளப்படுகின்றது.

இனக்குழு குடும்பங்கள்:

மனித சமுதாயத்தின் மிகத் தொன்மையான நிறுவனமாகத் திகழ்வதே குடும்பமாகும். இது எல்லாச் சமுதாயங்களிலும் எல்லாக் காலங்களிலும் நிலவி வருகின்றது. குற்றப்பரம்பரை

நாவலில் இடம் பெறும் குடும்பங்கள்யாவும் தொன்மை கால மரபினை பின்பற்றும் குடும்பமாக திகழ்கின்றன. கொம்பூதியில் இடம் பெறும் குலத்தலைவன் வேயன்னாவின் குடும்பம் தாய்வழிச் சமூகத்தை அடியொற்றி வந்ததாக நாவலில் கூறியுள்ளார். இதில் இடம்பெறும் கூழானி கிழவியே தாய்வழி விரிந்த குடும்பத்தின் தலையங்கமாக தரணியாளும் விதமாக நாவலில் இரத்தக் குடும்ப உறவுகளின் பரிணாமத்தை விளக்குகின்றது .

மேலும் கொம்பூதி மனிதர்கள் தங்கள் உறவுகளுக்குள்ளேயே திருமணம் செய்து கொள்கின்றனர். இதில் வேற்று கிளை வழி உறவுகள் திருமண உறவிற்காகவும், ஒரே கிளை வழி உறவுகளை சகோதர உறவுகளாகவும் வழிமுறைகளைக் கொண்டு வாழ்கின்றதாகக் குறிப்பிடப்படுகின்றது. இதன் பார்வையில்,

"அடியேய் .... வீரன் கிளை பொண்டுகளெல்லாம் சிட்டு பக்கம் போங்கடீ
வெட்டுவான் கிளை பொண்டுகளெல்லாம் மீனா பக்கம் போங்கடீ"[7]

என்ற சடுகுடு விளையாட்டில் இருபிரிவுகளாக பிரியும் அணியில் மதினி, மைத்துனி ஒரு அணியுமாய், சகோதரிகள் ஒரு அணியுமாய் விளையாடுவதிலிருந்து குடும்ப இனவரைவியலை காண முடிகின்றது.

நம்பிக்கையும் சடங்கும்:

தமிழ்மொழியால் காலத்தால் முற்பட்ட இலக்கண, இலக்கியங்கள் யாவும் மக்களின் நம்பிக்கைகளை இலக்கியம் வாயிலாக நமக்கு எடுத்துரைக்கின்றன. இதனை இக்கட்டுரையில் நாவல் வழியாக நம்பிக்கைகள் என்ற வாழ்வியல் கோட்பாடு இனவரைவியலாக எடுத்துரைக்கப்படுகின்றன. குற்றப்பரம்பரை மனிதர்கள் பழமையில் முதிர்ந்த நம்பிக்கைகாரர்களாக திகழ்கின்றனர். வேட்டைத்தொழில் செய்யும் பொழுது குலசாமி இருளப்பனுக்கு பூசை செய்து வேட்டைக்கு செல்கின்றனர்.

களவு கொணர்ந்த கிடாக்களை இருளப்பனுக்கு படைத்து கிடாக்கறிகளை முடாக்கறி சோற்றில் கலந்து குலசாமி இருளப்பனுக்கு படைத்து ஒன்று கூடி மறுபங்கீடு செய்து உண்டு வாழ்கின்றனர். இதன்வழி வரிகளில்,

"கூழானி ஆலமரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் ஆலமரத்து பட்சி, வலமிருந்து
இடம், "கீச்ச்.... ச் எனக் கத்திப் பறந்தால் நல்ல சகுணம். அதே பட்சி இடமிருந்து வலம்
அடித்துப் போனால் கேடு வரும். குருவி உத்தரவு குலசாமி உத்தரவு மாதிரி"[8]

என்று குலசாமியின் மீது கொண்டுள்ள நம்பிக்கைகளும், சடங்குகளும் இம்மனிதர்களின் அறியாமையை வெளிப்படுத்துகின்றன.

கொம்பூதி இனக்குழுக்களின் வீரத்தின் அடையாளமாக ஏறு தழுவுதல், ஈட்டி எறிதல் போன்ற வீரத்திறன்களும், கழுகு, மான், நாய் போன்ற இனங்களின் வளர்ப்பு முறைகளும் இனக்குழு மக்களின் வாழ்வினை வளமாக்குகின்றன.

மேலும் கொம்பூதியின் பெண் மக்கள் சடுகுடு, பாண்டி , தாயகட்டம் ஆடுபுலிஆட்டம் போன்ற விளையாட்டுகளில் களித்து மகிழ்கின்றனர். மந்திரம், சூனியம் போன்ற நிகழ்வுகளை முன்வைக்கும் வகையில் நாகமுனியின் பலிபீடமும், நரபலிகளும் நடுங்கச் செய்கின்றன.

இதனை, நாவல் வரிகளில்,

"நாகமுனியின் வைரக் கனவுகளுக்கு, நரபலி உறுதி. வஜ்ராயினியும்
அவளைத்தொடர்ந்து தானும் பலியாகப் போவது விதி"[9]

என்ற ஹசார்தினாரின் மனக்குமுறல்களின் மூலம் வஜ்ராயினி என்ற பெண்ணை நாகமுனி என்ற மந்திரவாதி உலகையே தன்வசம் ஆக்கும் வைரக் கற்களுக்காக இவளை பலி கொடுக்க ஹசார்தினார் என்ற திருநங்கையின் கூற்று மூலம் அப்பெண்ணை குழந்தையிலிருந்து வளர்த்து வரும் செய்தியை உணர முடிகின்றது

மேலும், இக்குழுவினர் மரபுசார் சட்டங்களை தங்களுக்கென்று தனித்துவமாகக் கொண்டு வருகின்றனர். நெல்மணிகளை அளக்கும் மரக்கால், பெருநாழி கொண்டு இவர்கள் அளப்பதில்லை.. சிரிய மரக்கால்களைக் கொண்டு அளந்து வருகின்றனர். மேலும் வேட்டைக்கு செல்லும் நாய்களுக்கு சுறுசுறுப்பை அளிக்க கஞ்சா கலந்த சோற்றினை உண்ணவைக்கும்

*வழக்கத்தைக் கொண்டு இருக்கின்றனர். இம்மாதிரிமாக பங்கீடு, உற்பத்தி விளையாட்டு, மந்திரம் போன்ற சடங்குகள் கோட்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன.*

*முடிவுரை:*

*இவ்வாறாக இவ்வாய்வுக்கட்டூரையில் குற்றப்பரம்பரை நாவல் மாந்தர்களின் குடியிருப்பு, முதல் வாழ்வியல் சடங்கு முறைகள் அதற்கும் அப்பாற்பட்ட மாந்திரிக உலகம் வரை அனைத்து கூறுகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு இனம் காண வழி வகை செய்யும் வண்ணம் இக்கட்டூரை அமைகின்றது. மேலும், இவ்வினக் குழுவினர் மானாவாரி பயிர்கள் பொய்க்கும் நிலையில் கன்னமிடுதல் புரிந்தாலும் இவை முரண்பட்ட வாழ்வியலாகவே கருதப்படுகின்றது. இதற்கு இம்மக்களின் கற்றல் அறியாமையே காரணமாக அமைகின்றன. கல்வி இல்லா நிலம் களர்நிலமாகிப் போன நிலையில் நாவலின் இனவரைவியல் முடிவுகள் தெளிவு பெறுகின்றன.*

*அடிகுறிப்புகள்:*

*1) ஆய்வுக்கோவை*

*நான்காம் தொகுதி – பதிப்பாசிரியர்கள் இரா. மோகன், ப.எ. 2800*

*இந்திய பல்கலைகழகத் தமிழாசியர் மன்றம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,*

*பதிப்பகம் : மீரா பைன் ஆர்ட்ஸ் முதற் பதிப்பு .2012மதுரை 625021*

*2) வைரமுத்து பொன்மணி வைரமுத்து கவிதைகளில் சமுதாயப்பார்வை.*

*முனைவா. ஜோ. மகேஷ்வரி, ப.எ 39 வசந்தா பதிப்பகம், முதற் பதிப்பு 2019*

*குறுக்குதெரு, ஜோசப்காலனி, ஆதம்பாக்கம், சென்னை - 600 088*

*3) குற்றப்பரம்பரை – வேலராமமூர்த்தி, கே.கே நகர் மேற்கு, டிஸ்கவரி புக்பேலஸ்,*

*முதற்பதிப்பு 2015 சென்னை.*

*4) மேலது ப. எ 44*

*5) மேலது ப. எ . 49*

*6) பண்பாட்டு மானிடவியல், பக்தவச்சலபாரதி, ப.எ 462மெய்யப்பன் பதிப்பகம்,*

*முதற் பதிப்பு -1990 சிதம்பரம் 608 001,*

*7) குற்றப்பரம்பரை ,வேலராமமூர்த்தி, ப.எ 47 கே.கே நகர் மேற்கு,*

*டிஸ்கவரி புக்பேலஸ்,முதற் பதிப்பு 2015 சென்னை .*

*8) மேலது, வேலராமமூர்த்தி. ப.எ 44*

*9) மேலது, வேலராமமூர்த்தி, ப.எ 139 ஆய்விதழ் அனுப்ப வேண்டிய முகவரி :*

*சி. பகவதி ராஜகுமாரி*

*4/180/1 முத்தம்மாள் காலனி, 3 ஆவது தெரு (ராஜ கணபதி கோவில் அருகில்)*

*தூத்துக்குடி-628002 bagavathirajakumari120@gmail.com*

********* ********* ********** ********* ********* ********** ********** **********